உ

கணபதி துணை.

சின்னப்ப நாயக்கர் இயற்றிய

பழனிப் பிள்ளைத்தமிழ்.

இது

மஹாமஹோபாத்யாய - தாக்ஷிணாத்யகலாநிதி

Dr. உ. வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம் — ருஅ.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

விலை அணா 3.

உ

முகவுரை.

கந்தரலங்காரம்.

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் றலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருக னுமையாள் பயந்த விலஞ்சியமே.

பிள்ளைத்தமிழென்னும் தமிழ்ப்பிரபந்தம், பாட்டுடைத்தலைவரைக் குழந்தையாகப் பாவித்துச் செவிலித்தாய் முதலியோர் அக்குழந்தையின் காப்புமுதலிய பத்துப் பருவங்களுக்கு ஏற்ற செயல்களைக்கூறிப் பாராட்டுவதாக ஆசிரியவிருத்தத்தினுற் பாடப்படுவது. இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழென்றும் பெண்பாற்பிள்ளைத்தமிழென்றும் இருவகைப் படும். காப்புப்பருவம்முதல் சிறுதேர்ப்பருவம் இறுதியாகவுள்ள பத்துப் பருவங்களமைந்தது ஆண்பாற்பிள்ளைத்தமிழ்; பெண்பாற்பிள்ளைத்தமிழ் இவற்றிற் சிலபருவங்களைப் பெறுமல் வேறுசிலவற்றைப் பெறும்.

இந்தப் பழனிப்பிள்ளைத்தமிழ், பழனியில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டு சின்னப்பநாயக்கரென்பவரால் இயற்றப்பெற்றது. காப்புச்செய்யுளோடு முப்பத்தொரு செய்யுட்களையுடையது. ஒவ்வொரு பருவத்திலும் மும்மூன்றுசெய்யுட்களே உள்ளன. பத்துப்பத்துப் பாடல்கள் இருத்தல் வேண்டுமென்பது விதியெனினும், சில கவிஞர்கள் அத்தொகையிற் குறைத்தும் பாடியுள்ளார்கள். ஒவ்வொரு பருவத்திற்கும் எவ்வேழு பாடல்களையுடைய சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழும், ஐவைந்து பாடல்களையுடைய கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழும் அம்முறையில் இயற்றப்பெற்றவை.

இதன் ஆசிரியரைப்பற்றி வேறொருசெய்தியும் அறியக்கூடவில்லை. "விசயகோபாலர் வாவிட்ட சிறுதேர்" (31) என இந்நூலில் இவர் கூறியிருத்தலால், பழனிக்கு அருகிலுள்ள பாலசமுத்திரமென்னும் ஊரிலிருந்த ஜமீந்தாராகிய விஜயகோபாலதுரை யென்பவரால் இவர் ஆதரிக்கப்பெற்றவரென்பது ஊகிக்கப்படுகிறது. இவருடைய வாக்கினால் இவர் முருகக்கடவுளிடத்து உண்மையான அன்புடையவரென்று தோற்றுகின்றது.

இத்தலத்திற்கு வேறொரு பிள்ளைத்தமிழ் உண்டென்று கேள்வியுற்றிருப்பதாகவும், "தப்பாத பழனிமலை யப்பாவெ னப்பனீ சப்பாணி கொட்டி யருளே" என்பது அதிலுள்ள ஒருசெய்யுட்பகுதியென்றும் திண்டுக்கல் வகீல் மகா-ா-ா-ஸ்ரீ எல். ஏ. வேங்குஸாமி ஐயரவர்கள் சொன்னார்கள்.

இந்நூலில் பழனிசம்பந்தமான பலவகைச்செய்திகள் அமைந்துள்ளன. பழனித்தலம் வைகாவூர் நாட்டிலுள்ளதென்பதும், அதற்கு ஆவினன் குடி, வைகாவூரென்னும் பெயர்களுண்டென்பதும், பழனிமலை சிவகிரியெனவும் வழங்கப்படுமென்பதும், பழனியைச்சார்ந்த ஊர்களாக எட்டுமங்கலங்களும், பன்னிரண்டு பள்ளிகளும், நூறூர்களும் உள்ளன என்பதும் அறியப்படுகின்றன. அன்றியும், பன்றிமலை, பூம்புரை, இடும்பன்மலை, ஷண்முகநதி என்பனவும் இதிற் கூறப்படுகின்றன. பழனியிற் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள பெருங்காயகியைப் பெரிய நாயகி, பெரியவளென ஆசிரியர் பாடுகின்றார். முருகக்கடவுள் சிவபெருமானுக்கு உபதேசித்தது, அவர் அகத்தியருக்கு உபதேசித்தது, அவர் சங்கத்தலைவராக இருந்தது, அவருக்கு யானைவாகனமுண்டென்பது, அவர் ஆட்டுக்கிடாயையூர்ந்தது, வெட்சியுங்கடம்பும் அவர் மாலைகளென்பது, மயில் பிரணவ உருவமென்பது முதலிய செய்திகள் இதில் அமைந்துள்ளன. முருகக்கடவுள் சிவபெருமானை வலம்வந்து கனியைப்பெற்றனரென்ற வரலாறு ஓரிடத்திற் குறிக்கப்பட்டுளது. அதற்குரிய ஆதாரம் கிடைக்கவில்லை. முருகக்கடவுளை முத்தைய

னென்றும் தேவயானையைக் கயவனிதையென்றும் கூறுவர். அல்லோல கல்லோலம், இலை (வெற்றிலை), கன்னங்கறுத்த, சம்மதி, சரிசமானம், சின்னஞ்சிறிய, சுசந்திரன், சுதி, சேதி, தாவு, துசம், துரை, பிளவு, புதம் (அறிவு), மத்தளி, மந்தாரம், மனது, மாமனார், முதலாளி, மெட்டி, ராவுத்தன், வசியாதார், விதாணம், வேணும் முதலிய அரும் பதங்களும் கெறுகெறென, குடகுடென எனவரும் அனுகரண ஓசைச் சொற்களும் இதில் ஆளப்பட்டுள்ளன. செவிலியர் தாலாட்டுதலைக் கூற வந்த இவர் அப்பொழுது கூறப்படும் 'ஆரார்' என்னும் குறிப்புத் தொடரை யார் யார் என்னும் பொருள்படப் பொருத்தி,

"சீரார் நலஞ்சேர் பூவுலகிற் றேவா சுரரின் மற்றையரிற்
றினமு முனது கொலுக்காணச் செல்லா தாரார் திறைவளங்கள்
தாரா தாரா ருனதுபதந் தனையே வணங்கித் தொழவேண்டித்
தழுவா தாரா ரெவ்வேளை சமயங் கிடைக்கு மெனநினைந்து
வாரா தாரா ருனதருளை வாழ்த்திப் புகழ்ந்து துதிக்க மனம்
வசியா தாரார் பணிவிடைகள் வரிசைப் படியே நடத்தாதார்
ஆரா ரெனத்தா லாட்டுகின்ற அரசே"

என அமைத்துள்ள பகுதி மிக்க நயம்பொருந்தி விளங்குகின்றது.

இந்நூலெழுதிய ஏட்டுப்பிரதியொன்றும் கடிதப்பிரதியொன்றும் 25-வருடங்களுக்கு முன் மேற்கூறிய எல். ஏ. வேங்குஸாமி ஐயரவர்களால் உதவப்பட்டன. அவ்வேட்டுப்பிரதியில் 'சின்னப்ப நாயக்கர் இயற்றியது' என்ற ஒரு குறிப்பு எழுதப்பட்டிருந்தது. இந்நூல் எளியநடையில் அமைந்திருத்தலின் சில இடங்களுக்குமட்டும் குறிப்புரை எழுதி இப்பொழுது பதிப்பிக்கலாயிற்று. இதனைச் செந்தமிழில் வெளியிட்டுதவிய பத்திராதிபர்களுடைய அன்பு பாராட்டற்பாலது.

சென்னை,
18—8—1932.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

உ

கணபதிதுணை.

பழனிப் பிள்ளைத்தமிழ்.

சிவனடியார் வணக்கம்.

வெண்பா.

1. போற்றவருந் தென்பழனிப் புண்ணியவே லாயுதன்மேற்
சாற்றரிய பிள்ளைத் தமிழ்கூற—நாற்றிசையும்
கண்டு வணங்குங் கணபதியின் றுணைதிருத்
தொண்டர்கண்மெய்ப் பாதந் துணை.

நூல்.

1. காப்புப் பருவம்.

2. பூமேவு நூற்றிதழ்த் தாமரைத் தவிசில்வளர்
பூமங்கை புவிமங்கையும்
பூசித்த திருவாவி னன்குடித் தலைவனைப்
புகழ்பெற்ற கருணையானைத்
தேமேவு வெட்சியந் தாமனைக் குழகனைச்
சேயினைச் சிவன்மதலையைச்
செவ்வேளை வளர்பழனி நகரில்வரு சிவகிரித்
தேசிகனை யினிதுகாக்க
நாமேவு முரசகே தனனுள மகிழ்ந்திடக்
காந்தாரி யீன்றெடுத்த
கவுரவர் பிரானிடந் தூதுபோய் மீண்டுவரு
கால்சிவந் திடமுன்னமோர்

குறிப்புரை.

2. வெட்சியந்தாமன்:"வெட்சிமலர்த்தாமா"(13.) குழகன்—இளையவன்; "என்றுமிளையாய்" (பழம்பாடல்.) சிவகிரி—பழனியிலுள்ளமலை, முரசகேதனன்—தருமபுத்திரன், கவுரவர்பிரான்—துரியோதனன்,

பாமேவு கவிஞனுக் கருள்சார் தன்பினொடு
பாய்சுமந் தெய்த்துவந்து
பாலாழி மீதிலே யறிதுயி லமர்ந்தருள்
பசுந்துழாய்க் கரியமுகிலே. (க)

3. வித்தக மிருந்ததிறல் வேற்படை விசாகனை
விளங்குமோ காரவாசி
மேல்வந்த ராவுத்த னைச்சரா வணத்தில்வரு
மெய்யான தனிநாதனை
உத்தமனை வெற்றியஞ் சேவலங் கொடிவிரு
துயர்த்தவனை யாறுமுகனை
உயர்பழனி நகரில்வரு சிவகிரியின் முருகனை
யுவந்தினிது மேற்புரக்க

கவிஞனென்றது, திருமழிசையாழ்வாரை. திருவெஃகாவிற் கோயில் கொண்டெழுந்தருளிய பெருமாள், "கணிகண்ணன் போகின்றான்" என்ற திருமழிசையாழ்வார் செய்யுளைக்கேட்டுத் தம்முடைய பாம்புப்படுக்கையைச் சுருட்டிக்கொண்டு அவருடன் சென்றனரென்பது இங்கே சுட்டப்பட்ட வரலாறு; இதன் விரிவைத் திருமழிசையாழ்வார் சரித்திரத்தால் உணரலாகும்; "ஆடரவத், தாழ்பாய லாளரைநீ தானே தொடர்ந்தாயோ, சூழ்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ" (**தமிழ்விடுதூது, 92-3**); "பணிகொண்ட முடவுப் படப் பாய்ச் சுருட்டுப் பணைத்தோளெருத்தலைப்பப், பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே" (**மீனாட்சியம்மைபிள்ளைத் தமிழ்;**) "முற்றாத காஞ்சியினு முல்லையினும் பாலையினும், கற்றான்பின் சென்ற கருணைமால்" (**தனிப்பாடல்.**) எய்த்து-இளைத்து. பழனிமலை சிவகிரியெனவும் வழங்கும்; "பழனிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமானே" **திருப்புகழ்,** 150.

3. வேற்படை—வேலாயுதம். ஓகாரவாசி—மயில்; வாசி—குதிரை; இங்கே ஊர்தி. மயில் பிரணவவடிவமென்று கூறப்படுதலின் இவ்வாறுகூறினர்; "ஓகார பரியின்மிசை வருவாயே", "ஆன தனிமந்த்ர ரூபநிலைகொண்ட தாமயி லென்ப தறியேனே" (**திருப்புகழ்.**) ராவுத்தன்—குதிரைவீரன்; "ராவுத்த ராயன்", "இனிமைகூர் இராவுத்தற்கு, நன்மைகூர் வரிசைத் தூசு நல்குவம்", "கொன்றை மாலைக் குதிரை யிராவுத்தன்" (**திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்,** 28: 83, 86; 46: 28); "சூர்கொன்ற ராவுத்தனே", 'இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே' (**கந்தரலங்காரம்,** 37, 50)

மத்தளி வயிற்றிப முகத்தெம் பிரான்கதிர்கள்
மாறுத சுடர்களிருவர்
மலர்மங்கை மாரிருவர் சத்தமா தாக்களிம
வான்றரு மடந்தைமற்றைச்
சித்தர்வித் யாதா ரியக்கர்கின் னார்முனிவர்
திசைமுகப் பிரமதேவர்
தேவர்கோன் முதலாய முப்பத்து முக்கோடி
தேவர்க்கு முதலாளியே, (உ)

வேறு.

4. அயனரு மறைமுனி வாரம ரர்கடொழ
அருடரு மானிட மருவிசைப் பாட்டினள்
அமுதினு மினிதெனு நிலைதரு மொழிபெறும்
அழகுயர் வடிவின ளிளமுலைக் கோட்டினள்
அடியரை யனுதின மனதினி லினிதுற
அருள்பெற வளவிய விருவிழிச் சூட்டினள்
அறுசம யமுமொரு வழிபட நிலமிசை
அவரவர் பாவக லருடனைக் காட்டினள்
இயலிசை யுடனொரு சதுமறை சுதிதா
இதுநல மெனகட மிடுமுறைக் கூத்தினள்
இடியென வலறிய மயிடனை யுடல்பொடி
யெனவிடு படையின னுலகினைக் காப்பவள்
இகபா மெனுமிரு தொழிலுடை யவளென
எவர்களு மறிதரு கருணையைப் பூட்டினள்
இடமுயர் வடகிரி யலமா வெதிர்வரும்
இமகிரி தருமொரு கவுரியைப் போற்றுதும்

மத்தளி—மத்தளம்; "மத்தளி" (பெரியாழ்வார் திருமொழி, 3. 4: 1.) சுடர்களிருவர்—சந்திர சூரியர். முதலாளி—முதல்வன்; என்றது சிவபெருமானை.

4. விழிச்சூட்டினள்—சூட்டுவிழியினளென மாற்றிக்கொள்க. வடகிரி—மேரு. வடகிரியையும் இமகிரியையும் இங்ஙனமே பின்பும் சேர்த்துச்சொல்லுவர்; "வடகிரியு மிமமலையும்" (12.)

கயமுக னுடனரி முகநிரு தனையொரு
கணமதில் விழவெகு சமரமிட் டார்த்திடு
களமிசை யலகைகள் கழுகுண நிணமருள்
கதிரொழு கியவயின் முருகனைக் கார்த்திகை
கனதன மொழுகிய பயநுகர் துகிர்நிற
அதரனை விதான முடையனைச் சிர்ப்பிடி
கணவனை வனமகள் முலைமுக டுழுதருள்
புயமலை நிருபனை யறுமுகச் சேப்பனை

மயன்மகள் கலவியை மதுவினி லளியென
மனமுறு மிருபது புயனையட் டார்ப்புறு
மனுகுல முறையர சுரிமைகள் செயவரு
மணிநிற வரிமகிழ் மருகனைக் கோட்டிள
மதிதட வியநெடு மதின்முக டளவிய
வரிசையி னடமிடு பாதமெய்க் கூத்தின
மயிலின முலவிய பழனியில் வளர்சிவ
கிரிதனின் மருவிய குமரனைக் காக்கவே. (௪)

---

2. செங்கீரைப் பருவம்.

5. வண்டாட நறவூறி மணமீறு மணிநீப
மாலையாடக்குழைகள்சேர்
மகரகுண் டலமாட வச்ரகே யூரமுடன்
மார்பிற் பதக்க மாடக்

அரிமுகநிருதன்—சிங்கமுகாசுரன். சமரமிட்டு—போர்செய்து. அயில்முருகனை; அயில்—வேல். பயம்—பால். துகிர்—பவழம். சிர்ப்பிடியென்றது தெய்வயானையம்மையை. வனமகள்—வள்ளிநாயகி; "வனமடந்தை" (17) என்பர் பின். சேப்பன்—செந்நிறமுடையவன்; சேப்பு—சிவப்பு; "சாப்புடையா ரமரர் மணி மகுடகோ டிகளுரிஞ்சிக் கழற்கால் சேக்குஞ், சேப்புடையார்" (திருவாப்பனூர்ப்புராணம், கடவுள். 4.) மயன்மகள்—மண்டோதரி. இருபது புயனை—இராவணனை. கோடு—வளைந்த பக்கம்; "இருகோட் டொருமதியெழில் பெற மிலைச்சினை" (நக்கீரர் திருவெழுகூற்றிருக்கை.): கூத்தின—கூத்தையுடைய.

5. மணி—அழகு, நீபமாலை—கடம்பமாலை. கேயூரம்—தோள்வளை.

கொண்டாடு நெற்றியிற் சுட்டியா டக்கரிய
கொந்தளக் குஞ்சியாடக்
கோலநெடு வான்முகடு தொடுகடற் றிவலைபோற்
குறுவெயர் முகத்திலாடக்
கண்டாடு மதரங் குவிந்தாட மாற்றேறு
கனகத் திழைத்த வரைஞாண்
கதிர்விரித் தாடநவ மணியினுற் செய்தவிரு
காலிற் சதங்கை யாடத்
திண்டாடு மசுரரைக் கொல்லவரு தீரனே
செங்கீரை யாடியருளே
திருமருவு பழனிவளர் சிவகிரியின் முருகனே
செங்கீரை யாடியருளே. (ரு)

6. பொற்றகடு ரிஞ்சிய மணிக்கலச நீர்கொண்டு
புனலாட்டி யுச்சி மோந்து
புல்லிவா யதாமு முந்திசெவி நாசியிற்
புனலேறி டாமலூதிப்
பற்றிய நிலப்பொட்டு நெற்றிமிசை யிட்டழகு
பாரித்த பட்டாடையாற்
பண்புறைய வீரம் புலர்த்திநவ மணியிட்ட
பருமணிச் சுட்டிகட்டி
நற்றமிழின் முனிபரவு குருவென்று தாலாட்டி
நறுவசம் பூறலூட்டி
நற்றாயி னிளமுலைப் பாலமுத மூட்டியிள
நலநிலவு போல்விளங்கச்

திண்டாடும்: "திண்டாடித் திசையறியாமறுகினர்" கம்ப. அட்ச. 39.

6. உரிஞ்சிய—அழுத்திய. புல்லி—தழுவி. நிலப்பொட்டை நெற்றிமிசை யிடல்; "நீராட்டி யிணைக்கணுந்தி நீரூதி, நேயத்துகிலின் மெய்துடைத்து நெகிழ்மென் முலையோ டெத்தழுவி, வாயிற் றிவலை தொடைத்து மண்பொட் டணிந்து நீறிட்டு" (பிரபுலிங்கலீலை, மாயைபுற்பத்தி, 46); "பாரிழைத் தொருபொட்டு, நுதன்மதிக்கிட்டு" (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செங்கீரைப். 4.) நற்றமிழின்முனி—அகத்தியமுனிவர்; இவருக்கு உபதேசித்தது: 13; "அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த அகத்தியனுர்க் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை" (சிவஞானசித்தியார்.) வசம்பூறல்—வசம்பின்சாறு. இளநலம்—இளமையழகு; "மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி" முருகு. 290.

சிற்றிடைச் செவிலிய ரழைத்துவகை கூரவே
செங்கீரை யாடியருளே
திருமருவு பழனிவளர் சிவகிரியின் முருகனே
செங்கீரை யாடியருளே. (௨)

7. புன்னையந் தாதூறு மலர்க்காவி லஞ்சிறைய
பொறிவண்டு மகரந்தமார்
பூமணந் தன்னையுண் டின்னிசை முழக்கவும்
போருகத் தடைகிடக்கும்
மின்னிறப் பெட்டனந் தனதுசினை யென்றுபோய்
வெள்வளையின் முத்தெடுத்து
மெல்லணை கிடத்தியே சிறகிட் டணைத்திடவும்
மேதியின் கன்றுதுள்ளிக்
கன்னலைச் சாடிவிளை யாடவுந் தோகைகார்
கண்டுநட னம்புரியவும்
கண்டுபழ னத்துழல் பானண்டு நன்றெனுங்
கயறுவி யெதிரேறிடும்
செங்கெல்சூ ழாறுமுக நதியுடைய வள்ளலே
செங்கீரை யாடியருளே
திருமருவு பழனிவளர் சிவகிரியின் முருகனே
செங்கீரை யாடியருளே. (௩)

3. தாலப் பருவம்.

8. கங்கைக் கொருமா மகனே குகனே கனியே கண்மணியே
கருணா லயமே மறையோர் தவமே கருதும் பெருவாழ்வே
திங்கட் சடிலன் மகிழுங் குருவே தேவர்கள் பணிகோவே
தெய்வச் சுருதிப் பொருளே பொருளின் றெளிவே களிகூரும்

7. சிறைய—சிறகையுடைய. கன்னல்—கரும்பு. பால்நண்டு—ஒருவகை நண்டு. ஆறுமுகநதி—ஷண்முகநதி.

துங்கப் புயனேர் திருமான் மருகா சோதிச் சுடரொளியே
தோகைக் குடையாய் நீபத் தொடையாய் சொல்லுக் கினியானே
சங்கத் தொருவா பழனித் தலைவா தாலோ தாலேலோ
தமிழா லுயருஞ் சிவமா மலையாய் தாலோ தாலேலோ. (௧)

வேறு.

9. குவளைக் கருங்கட் கடைசியர்கள் குடித்துக் களித்துக் கள்விலைக்குக்
குவையல் குவைய லாக்குவித்துக் கூட்டி மணிநித் திலமளந்த
பவள வள்ளந் தனையிடுக்கிப் பரிவி னுடனே குரவைபல
பாடு மிசையான் மள்ளர்குழாம் பகட்டுக் கழுத்திற் பரம்பிணக்கித்
துவள வுழுத கருஞ்சேற்றிற் றுலங்க விளைந்த செஞ்சாலித்
தொகையுங் கரும்பு முத்தினச் சோதிப் பிறைபோற் பணைகடொறுந்
தவளங் கொழிக்குந் திருப்பழனித் தலைவா தாலோ தாலேலோ
சைவந் தழைக்கப் பிறந்தருளுஞ் சதுரா தாலோ தாலேலோ. (௨)

வேறு.

10. தகரிற் பரியினின் மயின்மிசை பவனிகள் வருவாய் தாலேலோ
சதுரிற் றுறைபல நிறுவிய மறைதொழு சரணா தாலேலோ
புகரைக் குருவெனு நிருதரை விறல்கொளு நிபுணா தாலேலோ
புதனைப் பெறுமதி நிலவிய சடையினன் மதலாய் தாலேலோ

---

8. தோகைக்குடையாய்-மயிற்கலாபத்தைக் குடையாகப் பெற்றவனே. சொல்லுக்கினியானே: “பேசப்பெரிது மினியாய்நீயே” (தேவாரம்.) சங்கத்தொருவா: முருகக்கடவுள் தமிழ்ச்சங்கத்தேயிருந்து தமிழாராய்ந்தாரென்று இறையனாரகப்பொருள் உரையால் அறியலாகும்; “சங்கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ” (முத்துக்குமாரசாமிபிள்ளைத்தமிழ்.) சிவமாமலை-சிவகிரி, பழனிமலை.

9. குவையல்-குவியல். பகடு-எருது. பரம்பு-சேற்றைச் சமன்செய்யும் பலகை. சாலி-நெல். பணைகள்-வயல்கள். தவளம்-முத்து. சைவந்தழைக்கப் பிறந்தருளுமென்றது, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராக அவதரித்ததை நினைந்து கூறியது; “கூனினைத் தீர்த்தினிய கூடலார் கோமான் குளிர்ந்திடச் செய்தவிவன்”, “மதுரைப் பதிவி லாசுபுரி மாற னறியக் கழுவேறுந், தம்பச் சமணர் மனையன்று” (22,28) என்பர் பின்னும்.

10. தகர்-ஆட்டுக்கிடாய். பரி-குதிரை. சதுர்-திறமைப்பாடு. சரணா-திருவடியுடையோய். புகர்-சுக்கிரன். விறல்கொளும்-வெற்றிகொள்ளும்; வெல்லும்.

குகனைத் துணையெனு மரிமன மகிழ்தரு மருகா தாலேலோ
குலவிப் பலபல திசையினு மிசைபெறு குமரா தாலேலோ
பகரற் கரியன பொருடமிழ் முனிபெற வருள்வாய் தாலேலோ
பழனிப் பதிவளர் சிவகிரி மருவிய முருகா தாலேலோ. (௰)

---

4. சப்பாணிப் பருவம்.

11. அரியமறை முடியினுறை யுபநிடத நிலைதெரியும்
அந்தணர்க ளாசிகொட்ட
ஆவலங் கொட்டநின் றயிராணி கேள்வன்முத
லமரருள மூவகைகொட்டப்
பெரியநா யகியெனு முமைத்தாய் மகிழ்ச்சியொடு
பேரின்ப முறுவல்கொட்டப்
பேறுன கலைமங்கை மகதியா ழிசையொடும்
பேர்பெற்ற மொழிகள்கொட்ட
உரியமதி வெண்குடைச் சிலைவேள் பணிந்துநின்
றேங்கியே துதிகள்கொட்ட
உன்மத்த ரானகயி லாசபதி மூத்தமிட்
டுன்னைவாழ்த் தொலிகள்கொட்டத்
தரியலர்க ளெனுமவுணர் நெஞ்சுபறை கொட்டவே
சப்பாணி கொட்டியருளே
சதுமறைகள் பரவவரு பழனிமலை முருகனே
சப்பாணி கொட்டியருளே. (க)

குகன்-வேடர்தலைவன்; இராமர்தோழன்.

11. கொட்ட-மிகுதியாகக்கூற. ஆவலங்கொட்டல் - வாயைப்பொத்திக் கொண்டு முழக்கஞ்செய்தல். அயிராணி-இந்திராணி. பெரியநாயகி-பிருகந் நாயகி; இஃது இத்தலத்திலுள்ள அம்பிகையின் திருநாமம். தரியலர்கள்-பகைவர்கள்.

12. நெடுவரைகள் புடைபரவு வடகிரியு மிமமலையும்
நெறுநெறென வயிரமிட்ட
நிகளத்தை மெட்டி மெட் டிப்பொடி படுத்தியொரு
நினைவுகொண் டார்த்தெழுந்து
நிலைபெற்ற கந்ததனை வேரொடு மிடந்துமத
நீர்வழிந் தொழுக வெற்றி
நீள்புழைக் கையதனில் வச்சிரத் தாற்செய்த
நெடியசங் கிலியையேந்திப்

படவரவி னெடுமுதுகி னிடைபரவு புடவிகிழி
படவுமிரு கோட்டிலெற்றிப்
பாய்ந்துதன் னிழலைச் சுளித்துமேற் கொண்டுவரு
பாகனைச் சீறியுதறிப்
பரிதியைக் கனியென்று மேக்குயரு மதிதனைப்
பாற்கவள மென்றுதாவிப்
புகிரண்ட கூடத்தை யெட்டிமைக் காரினைப்
பற்றிப் பிடித்துவாரிக்

குடகுடென வேரீரை மொண்டுண்டு கடலிற்
குளித்தழன் றுன்னைமுதுகிற்
கும்பத் தலத்திலிட் டெண்டிசைக ளெங்கும்
குலாவியசு ரப்படையெலாம்
கொன்றுழக் கிச்சென்று திருநீறி டாச்சமணர்
குடர்தனைச் சிதறியமரர்
கூட்டமிடு மினியகற் பகநிழலி லேநின்று
கோபந் தணிந்தறிவுசேர்

---

12. வடகிரியும் இமமலையும்: 4. நெறு நெறு: ஒலிக்குறிப்பு; "அரக்கர் கோனை, நெறுநெறென வடர்த்திட்ட நிலையும் தோன்றும்" (தே. திருநா.); "அசுரர், இறைகளவை நெறுநெறென வெறிய" (திவ். பெரியதிருமொழி); "நெறு நெறு நெறுவென" (திருப்புகழ்). நிகளத்தை – காற்சங்கிலியை; "அகளங்கா வுன்ற னயிரா பதத்தின், நிகளங்கால் விட்ட நினைவு." மெட்டி– காலாற் சண்டி; வழக்கு. கந்து–கட்டுத்தறி. மதியைப் பாற்கவளமென்றல்: "திங்களிறு மாந்தலைவத் தீம்பாற் கவளமென்று, வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே" திருவேங்கடமாலை, 31.

தடவிகட கால்வாய் மருப்புப் பருப்பதத்
தந்தியயி ராவதமுதற்
றந்தியெட் டுந்தாங்கு முலகைவல மாகவே
தான்வந்து சிவன்மார்பினிற்
சாய்ந்துகைக் கனியினைத் தாவென்று கேட்டிடத்
தந்தோ மெனக்கொடுப்பத்
தயவினுட னேகொள்ளு மீராறு கையினாற்
சப்பாணி கொட்டியருளே
சதுமறைகள் பாவவரு பழனிமலை முருகனே
சப்பாணி கொட்டியருளே. (உ

வேறு.

13. நறைகம ழிதணிற் கவணெறி பவள்பா
ணட்பு மிகுத்தோனே
நலமலி கருணைச் சிவனுமை புதல்வா
நற்றவர் மெய்ப்பேறே
பிறைமிலை சடிலற் குரையருள் துரையே
பெற்றி படைத்தோனே
பெருமலை யெனவுற் றருண்மயி லுடையாய்
பெட்புயர் வித்தாரா
விறன்மிகு மசுரர்க் குறுபகை யுடையாய்
வெற்றி நிறைத்தோனே
விகசித கமலத் திருமகள் மருகா
வெட்சி மலர்த்தாமா

தந்தி-பிணிமுகமென்னும் யானை; எழுவாய்; "கால்கிளர்ந்தன்ன வேழ மேல்கொண்டு" (முருகு. 82) "கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு" (பதிற். 11), "பிணிமுக மூர்ந்த வெல்போ ரிறைவ" (பரி. 17), "பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" (புறநா. 56) என்பவற்றால் முருகப்பெருமான் வேழமூர்தலும் அதற்குப் பிணிமுகமென்னும் பெயருண்மையும் அறியப்படும். வலமாகவேதான்வந்து-யானைவலம்வர அதன்மேல் தான் ஏறிவந்து; தான்-முருகக்கடவுள்.

13. இதணில்-பரணில். எறிபவள்-வள்ளிநாயகி. துரை: "அழகுதுரையே" (27.); விகசிதம்-மலர்ச்சியுடைய.

குறுமுனி பாவத் தமிழுரை பகர்வோய்
கொட்டுக சப்பாணி
குலவிய பழனிச் சிவகிரி முருகா
கொட்டுக சப்பாணி. (ரு)

---

5. முத்தப் பருவம்.

14. மாலிடந் தனின்மேவு முத்துமுபர் வாரண
மருப்பிற் பிறந்தமுத்தும்
மங்கையர் கழுத்து முத் துஞ்சாலி தன்னிடம்
வகைபெற விளைந்தமுத்தும்
கோலமிகு கன்னற் கணுக்கடொறு மேவெண்மை
குன்றுது தோன்றுமுத்தும்
கோகனக முத்துமிப் பியின்முத்து மேலான
குருநிறச் சங்குமுத்தும்
சால்வே வரையினுங் கடலினுஞ் சேற்றினுந்
தரையினும் வானிடத்தும்
தானுலைந் துடைபட்டு விலைபடுவ வாகையாற்
சரியென்ப தில்லையதனுற்
பால்மணங் கமழ்தாத் தேன்வழிந் தொழுகுநின்
பவளவாய் முத்தமருளே
பழனிவளர் சிவகிரியில் மருவுகுரு தேசிகன்
பவளவாய் முத்தமருளே. (க)

15, தந்தா வளக்கும்ப மதயானை யெட்டுமே
தாங்கிய நெடும்புவனமேற்
சக்ரவா ளத்தையொன் றுய்ச்சுற்றி வெள்ளிமலை
தன்னைவல மாகவந்து

குறுமுனி......பகர்வோய்: "குறுமுனிக்குத் தமிழுரைக்குங் குமர முத்தர் தருகவே" திருச்செந்திற்பிள்ளைத்தமிழ்.

14. மால்—மேகம். வாரணம்—யானை. வரை முதலியவற்றை எற்பக்கொள்க. சரி—ஒப்பு.

பிந்தாம லண்டச் சுவர்க்கோடு மட்டினும்
பெரிதுசென் றிரவிமதியைப்
பின்னிடப் பாய்கின்ற கோளாவின் வாயைப்
பிளக்குடம்ப ரூரைநாடி.

மந்தார வனமீ துளைந்துசூன் முதிர்கொண்டல்
மந்தார நிலைகண்டுதன்
வன்சிறை விரித்தாடி யல்லோல கல்லோல
மகரநீ ரேழுழக்கும்

பைந்தோகை யம்பரியி லேறிவரு சேவகன்
பவளவாய் முத்தமருளே
பழனிவளர் சிவகிரியின் மருவுகுரு தேசிகன்
பவளவாய் முத்த மருளே. (உ)

வேறு.

16 கன்னங் கறுத்த குழல்செருகிக்
கடைசி மடவார் கழனிதொறும்
கதித்து விளைந்த செஞ்சாலிக்
கதிரை யரிவாள் கொடுகொய்து

சின்னஞ் சிறிய விடைத்துவளச்
சென்று வரம்பின் கரையருகிற்
செல்லு மளவிற் பசுஞ்சோலைத்
தேமாங் கனியை யுதிர்த்தெழுந்து

பொன்னி னிறத்த கதலிகளும்
பூவைக் கனியைச் சிதறிமனம்
பொருந்தி வரும்வா னரங்களிவர்
பொருமு முலையை யிளநீரென்

15. கோடு—சிகாம், மந்தாரம்—மப்பு, கம்மல்; " மழையுமந் தாரமும் வந்தன வாணன் " (தஞ்சைவாணன்கோவை, 99.) அல்லோலம்-பேரோசை. கல்லோலம்—அலை. மகரநீர்—கடல்.

16. பூவையும், கனியையும், இவர்—கடைசியர்களுடைய,

றன்னித் தாவிப் பிடித்திடுறூ
றார முத்தந் தருகவே
உயரும் பழனிச் சிவகிரிவா
யுறைவாய் முத்தந் தருகவே. (௲)

---

6. வருகைப் பருவம்.

17. கந்தா வருக கயவனிதை கணவா வருக வனமடந்தை
காந்தா வருக விரைகொழிக்குங் கடம்பா வருக கடவுளர்கள்
சிந்தா குலங்க டவிர்க்கவந்த சேயே வருக மறைதுதிக்கும்
தேவே வருக பெரியவுமை செல்வா வருக செகத்திலின்பம்
தந்தாய் வருக தவம்புரிவோர் தவமே வருக வைகாவூர்த்
தலைவா வருக வோராறு சமயா வருக சரவணத்தில்
வந்தாய் வருக சிவனருள்கண் மணியே வருக வருகவே
வளஞ்சேர் பழனிச் சிவகிரிவாழ் வடிவேன் முருகா வருகவே.

18. சீரார் நலஞ்சேர் பூவுலகிற் றேவா சுரரின் மற்றையரிற்
றினமு முனது கொலுக்காணச் செல்லா தாரார் திறைவளங்கள்
தாரா தாரா ருனது பதந் தனையே வணங்கித் தொழவேண்டித்
தழுவா தாரா ரெவ்வேளை சமயங் கிடைக்கு மெனநினைந்து
வாரா தாரா ருனதருளை வாழ்த்திப் புகழ்ந்து துதிக்கமனம்
வசியா தாரார் பணிவிடைகள் வரிசைப் படியே நடத்தாதார்
ஆரா ரெனத்தா லாட்டுகின்ற வரசே வருக வருகவே
அருள்சேர் பழனிச் சிவகிரிவா ழையா வருக வருகவே. (௨)

நூறூர்: இவை பழனியாண்டவர்க்குரியவை; "இவனும் நூறூரான்" (21), "நூறூரும்" (30) என்பர் பின்.

17. கயவனிதை-தெய்வயானை. காந்தா-கணவனே. சிந்தாகுலங்கள்-மனக் கவலைகளை. பெரியவுமை-பெரியநாயகி. வைகாவூர்-பழனி.

18. கொலு-திருவோலக்கம். ஆர் என்பது ஒருவரும் இலரென்னும் பொருளில் வந்தது. திறைவளங்கள்-காணிக்கையாகச் செலுத்தும் பொருள்கள். வசியாதார்-கைவசஞ்செய்யாதவர்கள். ஆராரெனத் தாலாட்டுகின்ற: பெண்கள் தாலாட்டுகையில் "ஆராரோ ஆரிரரோ" எனக் கூறித் தொட்டிலை அசைத்தல் வழக்கம்; "ஆராரா ரென்றுதா லாட்டினன்" விறலிவிடு. 178.

19. பொன்னே வருக பொன்னரைஞாண் பூட்ட வருக சிறுசதங்கை
புனைய வருக மணிப்பதக்கம் பூண வருக தவழ்ந்தோடி
முன்னே வருக செவிலியர்கண் முகத்தோ டணைத்துச் சீராட்டி
முத்த மிடற்கு வருகவெதிர் மொழிகள் மழலை சொலவருக
தன்னே ரில்லா நுதற்றிலதந் தரிக்க வருக விழியினின்மை
சாத்த வருக மேலாகத் தானே வருக தேவர்தொழு
மன்னே வருக மாமாலின் மருகா வருக வருகவே
வளஞ்சேர் பழனிச் சிவகிரிவாழ் வடிவேன் முருகா வருகவே.

---

7. அம்புலிப் பருவம்.

20. மாகமுயர் சந்த்ரனீ தெய்வவா ரணவனிதை
மகிழுஞ்சு சந்த்ர னிவனும்
மதிசேர் மதிப்பிள்ளை நீயிவன் சிவன்மனது
மகிழ்சம் மதிப்பிள்ளைநீ
தேகவொளி மீறியகு பேரனிவன் மலைவந்து
தெண்டனிட விலகுபேரன்
திருமருவு மிருகோட் டிளம்பிறை நீயெழில்
சேர்ந்தருள் கடம்பிறையிவன்
பாகமுயர் கின்றவெண் சசியுநீ பொன்னுடர்
பரவுசசி மருகனிவனும்
பார்மீது புகழ்பெற்ற சோதிநீ யிவனும்
பரஞ்சோதி வடிவனுகும்
ஆகையா லிவனுநீ யுஞ்சரிச மானமே
யம்புலீ யாடவாவே
அருள்பரவு பழனிவளர் சிவகிரியின் முருகனுட
னம்புலீ யாடவாவே. (க)

---

20. சுசந்த்ரன்-களங்கமற்ற நல்ல சந்திரன் சம்மதி-உடன்பாடு. குபேரன்-சந்திரன்; விகாரமான உடலையுடையவன். பேரன்- குறிஞ்சி வேந்தனென்னும் திருநாமத்தையுடையவன். கடம்பு இறை. சசி-சந்திரன், இந்திராணி; சசியுமென்பதிலுள்ள உம்மை அசைநிலை.

21. ஓதரிய கலைகள்பதி னாறுமாத் திரமுனக்
குண்டுகலை யறுபத்துநான்
குடையனிவ னொருநா னீயிவனு நூறான்
உன்றிகிரி யிரவுசெல்லும்

சேதிபெற வேயிவன் றிகிரிபெப் போதுமே
செல்லுமிது வல்லாமலே
தேய்வதுஞ் சிறிதுநாள் வளர்வது முனக்குண்டு
சிந்தையி லிவன்பதத்தைப்

போதுகொ டருச்சித்த பேர்களுந் தேய்வுறார்
பொல்லாத மறுவுடையனீ
பூமிவா னகமுள்ள கடவுளரின் மறுவிலாப்
புனிதனிவ னாருமென்பார்

ஆதலா லிவனுனக் கதிகனா மென்றிவனொ
டம்புலீ யாட வாவே
அருள்பரவு பழனிவளர் சிவகிரியின் முருகனுட
னம்புலீ யாட வாவே. (௨)

22. வானிடை வழிக்கொண்டு நீசெல்லு மளவைதனின்
மாசுணப் பகைதொடருமம்
மாசுணப் பகையைத் துரத்தவிவ னேறிவரு
மயிலின் சகாயமுண்டு

கூனினைத் தீர்த்தினிய கூடலார் கோமான்
குளிர்ந்திடச் செய்தவிவனின்
கூனைத் தவிர்ப்பனீ வரவேணு மிவனிடங்
குறுகினாற் பலனுமுண்டாம்

---

21. வளர்-பரிவேடம். நூறான்: 16. சேதி-செய்தியென்பதன் மரூஉ; வழக்கு; சேதித்த லெனலுமாம். திகிரி—மண்டிலம், ஆஞ்ஞாசக்கரம். போது—மலர். மறு—களங்கம், குற்றம்.

22. மாசுணப்பகை-இராகுவாகிய பகைப்பாம்பு. கூடலார் கோமான்-பாண்டியன். வேணும்: "வேணுமாகில் வேணுமன்றி" வில்லிபுத்தூராழ்வார் பாரதம், சூதுபோர். 165.

நானினஞ் சொல்வதேன் வாராத போதிலுனை
நாடிப் பிடித்துலர்த்தி
நனிவீர பத்திரன் றேய்த்ததென வேலூன
நல்காத வண்ண மேசென்
ருனிடையின் மருவுவா னுபதேச குருவினுட
னம்புலீ யாடவாவே
அருள்பாவு பழனிவளர் சிவகிரியின் முருகனுட
னம்புலீ யாடவாவே. (௲)

---

8. சிறுபறைப் பருவம்.

23. ஐவகை யிலக்கணமு மைங்காவி யத்துறையு
மாராய்ந்து பாகமுறையால்
ஆசுமது ரஞ்சித்ர வித்தார முஞ்சொலு
மருங்கவிஞர் துதிமுழக்க
மெய்வருந் தவமுனிவர் மூள்ளரைய நெடுநாள
வெண்ணளின வாதனத்தின்
மேவுநா மகள்கொழுந னுடன்வந்து தானின்று
வேதவொலி யேமுழக்கக்

வீரபத்திரன் தேய்த்தது தக்கயாகசங்காரத்தின்பொழுது. ஊனம்-குறைவு. ஆனிடையின் மருவுவான்-சிவபிரான்.

23. ஐவகை இலக்கணம்-எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. ஐங்காவியம்-சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பன. பாகம்-செய்யுளின் நடைவகை; இது, க்ஷீரபாகம், திராக்ஷாபாகம், கதலீபாகம், இக்ஷுபாகம், நாளிகேரபாகம் முதலாகப் பலவகைப்படும்; "பான் முந்திரிகை வாழைக் கனியாய்க், கிளர்ந்தகரும் பாய்நாளிகேரத்—திளங்கனியாய்த், தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான, முத்திக் கனியேயென் முத்தமிழே" (தமிழ்விடுதூது, 63–9.) மூள் அரைய-முட்கள் பொருந்திய அடியையுடைய. நாளம்-தண்டு.

கைவரும் வழியிலே மனதுவா மனதின்வழி
கண்வரத் தந்திமீட்டும்
கந்தருவர் வீணையிசை யாழிசை முழக்கவான்
கடவுளர்கண் மலர்கள்பெய்து
தெய்வதுந் துமியொடு வலம்புரி முழக்கநீ
சிறுபறை முழக்கியருளே
திருவாவி னன்குடிப் பழனிமலை முருகனே
சிறுபறை முழக்கியருளே. (க)

24. கார்கொண்ட தண்டலை நெருக்கத்தி ளமஞ்ஞை
கவினுலவு தோகையுதறிக்
கண்ணுறச் சிறைவிரித் தாடவிள மரந்தளிர்
கறித்துமென் குயில்கள்பாடத்
தார்கொண்ட வஞ்சிறைப் பாட்டளிக ளொருகோடி
தாதுண்டு பண்ணிசைகொளத்
தாழுங் குடக்கனி யுதிர்க்கின்ற சூன்மந்தி
தண்கமுகின் மீதிலேறும்
ஏர்கொண்ட பழனத்தி லாலைவாய்ப் பாலடு
மிளங்கோல மள்ளர்மடவார்
இசையினுற் குரவைகண் முழக்கவே மருதநில
மெங்குமுயர் வளமைவீறும்
சீர்கொண்ட தருமவை காபுரிக் கிறைவனே
சிறுபறை முழக்கியருளே
திருவாவி னன்குடிப் பழனிமலை முருகனே
சிறுபறை முழக்கி யருளே. (உ)

தந்தி-நரம்பு. வீணை வேறு, யாழ் வேறு; "வேய்ங்குழல் விளிகொள் நல்யாழ் வீணையென் றினைய நாண" கம்ப. அரசியல், 3.

24. தண்டலை-சோலை. ஒரு கோடி யென்றது பன்மையைச் சுட்டியது. இங்ஙனம் வருவதை அனந்தவாசி யென்பர் தக்கயாகப்பரணி யுரையாசிரியர். குடக்கனி-பலாப்பழம். மள்ளரும் மடவாரும். குரவைகள்-குரவைப்பாட்டுக்கள். வைகாபுரி-பழனி.

வேறு.

25. குசைகொடு மறையோர்தொழவருள் புரிவோய்
குணதர வித்தகனே
குலவிய புகழ்சேர் பெரியவள் புதல்வா
குடவயி றற்கிளையாய்
புசபல முடனே வருமசு ரரையே
பொருத திறற்படையாய்
புதமிகு பொதியா சலமுனி பணிவோய்
புதுமை மிகுத்தவனே
இசைபெறு மதுரா புரிவரு புலவோ
னிசையை வளர்ப்பவனே
இமையவர் பதிமான் மகளிரை மகிழ்வோய்
எழில்பெறு கட்டழகா
திசைமுகன் முதலோர் பரவிய குழகா
சிறுபறை கொட்டுகவே
சிவகிரி முருகா குருபர குமரா
சிறுபறை கொட்டுகவே. (௫)

---

9. சிற்றிற் பருவம்.

26. பருமுத் தரிசி தனையாய்ந்து
பசுந்தே னதனை வடித்தெடுத்துப்
பவழக் குடத்தி னுலையேற்றிப்
பரிவு தரும்பாற் சோறாக்கி

---

25. குசை-தருப்பை. பெரியவள்-பெரியநாயகி. குடவயிறன்-கணபதி. புதம்-அறிவு. புதுமை மிகுத்தவனே; "பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" (திருவாசகம்.) புலவோன்-நக்கீரர். இமையவர்பதி-இந்திரன். இமையவர் பதியினுடைய மகளும் மான்மகளும் ஆகிய மகளிரை.

26. முத்தரிசி-முத்தாகிய அரிசியை; "அரிசி முத்தழல் செம்மணி" திருவிளை. நகரப். 64.

ஒருமைப் படியே பூந்தளிரை
ஒன்றாய்ப் பறித்துக் கறிசமைத்தே
உண்ணும் படிக்கின் குபசரிக்கும்
உரிமைப் பருவத் திளங்கோதைப்
பெருமை மடவார் நாங்களின்று
பிரியத் துடனே வெண்பளிங்காற்
பிரியவகைக்குக் கட்டுவித்த
பெரிய மனையெம் மனையுன்றன்
அருமைச் சிறுகிண் கிணிக்காலால்
ஐயா சிற்றி லழியேலே
அமலா பழனிச் சிவகிரிவாழ்
அரசே சிற்றி லழியேலே. (௬)

27\. இளப முலைகள் புடைத்தெழுந்த
காலப் பருவத் துனைநினைப்போம்
கட்டி யணைத்துச் சிவனருளும்
கனியே யென்று வாழ்த்தல்செய்வோம்
பிளவு மிலையும் பகிர்ந்துனது
பேரைப் பாடித் துதிசெய்வோம்
பிரியத் துடனே யருகிருத்திப்
பிரசத் துடனே யமுதளிப்போம்
பழகி யிருந்து மெங்கண்முகம்
பாரா திருக்க வழக்குண்டோ
பாத மலர்கள் சிறுமணலின்
பால்பட் டழுந்திச் சிவந்திடுமே
அழகு துரையே வைகாவூர்க்
கதிபா சிற்றி லழியேலே
அமலா பழனிச் சிவகிரிவாழ்
அரசே சிற்றி லழியேலே. (௨)

27\. பருவமென்றது மங்கைப்பருவத்தை. பிளவு—பாக்கின் பிளவு; "வெற்றிலையின் முன்னே வெறும்பிளவை வாயிலிட, நற்றிருவா மங்கை நடப்பனே" (தேரையர்வெண்பா.) இலை—வெற்றிலை. பிரசம்—தேன். அமுது—பால்.

28. உம்பர்க் கிடர்செய் துலகனைத்தும்
ஒன்றாய்த் தனது வசப்படுத்தி
ஒருமை தவறிக் கடுங்கொடுங்கோல்
ஓச்சி நிருதர் புடைசூழ
வம்பத் தனமே மேற்கொண்ட
வலிசேர் சூரன் மனையிதன்று
மதுரைப் பதியி லரசுபுரி
மாற னறியக் கழுவேறும்
தம்பச் சமணர் மனையன்று
தமியேம் யாங்கண் மெய்வருந்தித்
தங்கத் தகட்டாற் செய்தமனை
தானே யறிந்து மறியார்போல்
அம்பொற் றிருத்தா மரைப்பதத்தால்
ஐயா சிற்றில் சிதையேலே
அமலா பழனிச் சிவகிரிவாழ்
அரசே சிற்றி லழியேலே. (௧)

---

10. சிறுதேர்ப் பருவம்.

29. இந்திரன் குடைபிடித் திடவழற் கடவுள்வந்
தெதிர்நின்று விசிறிவீச
இயமனுட னிருதிவெண் சாமரைகண் முறைமுறை
யிரட்டவரு ணன்வாயுவும்
சந்திரனு முடைவாளை யேந்திநின் றிருபுறந்
தாநிற்ப வளகைவேந்தன்
தயவினொடு காளாஞ்சி யேந்தவீ சானனிது
சரியென்று முறுவல்கூர

---

28. வம்பத்தனம்—தீக்குணம்; "வள்ளற் றனமென் னுயிரை மாய்க்கும்" கம்ப, நகர்நீங்கு. 62.

29. இரட்ட—மாறிவீச.

மந்திரப் புனல்கொண் டருச்சித்து வேதன்முதல்
மறைமுனிவர் துதிகள்செய்ய
வானகத் தமரர்நறு மலர்பெய்ய மழகதிர்
மறைத்தகார் மழைகள் பெய்யச்
சிந்தனை மகிழ்ந்துநவ மணியினொ லொளிர்கின்ற
சிறுதே ருருட்டியருளே
தென்பழனி நகரிவரு சிவகிரியின் முத்தையன்
சிறுதே ருருட்டியருளே. (க)

30. பன்றிமலை பூம்புரை யிடும்பன்மலை யீரா று
பள்ளியா றாறுவேதம்
பரவுமங் கலமெட்டு நூறாறு மேயிசை
படைத்தவை காபுரியினும்
குன்றிடத் தும்பரங் கிரிசெந்தி லாவினன்
குடியே ரகத்தைமுதலாய்க்
குளிர்வளஞ் சேர்சோலை மலையிடத் தும்பரவு
கொள்கையா லுஞ்சுடர்விடும்
வென்றிவேல் கையிற் றரித்தலா லுஞ்சேவல்
விருது துச மேவலாலும்
மேலான தெய்வநீ யாமென்று போற்றியுனை
வேண்டிநின் றமரர்வாழ்த்தத்

சிந்தனை-மனம்; “சிந்தனை வாக்கிற் கெட்டாச் சிவன்” திருவிளை. வெள்ளையானை. 18. முத்தையன்-முத்துக்குமாரமூர்த்தி.

30. பன்றிமலை-வராககிரி; இதன் முதற்பெயர் மாயாசலமென்பது. வராகமுனிவரென்பவர் சிவபெருமானை இம்மலையிற் பூசித்துப் பேறுபெற்றனர்; அதுமுதல் அவர்பெயரால் இது வழங்கலாயிற்று; (பழனிப்புராணம், பன்றிக்குட்டிக்குப். 22-3.) பூம்புரை: இது பூம்பாறையென வழங்கும்; இது வராககிரியிலுள்ளது; (பழனிப்புராணம், கிரிசிவஸ்தானச். 4.) பன்றிமலையென்பதற்குத் திருவிளையாடற்புராணம் வேறுகாரணம் கூறும். இடும்பன்மலை-பழனிமலைக்கு அருகிலுள்ளது. ஈராறுபள்ளி-பள்ளியென்னும் சொல்லை இறுதியாகவுடைய பன்னிரண்டு ஊர்கள். மங்கலம் எட்டு-மங்கலம் என்னும் சொல்லை இறுதியாகவுடைய ஊர்கள் எட்டு; அவை கோதைமங்கலம் முதலியனவென்பர். ஆறு ஆறு-ஷண்முகநதி. துசம் த்வஜம்-கொடி.

தென்றல்வரை முனிபரவு மெய்ஞ்ஞான தேசிகன்
சிறுதே ருருட்டியருளே
தென்பழனி நகரிவரு சிவகிரியின் முத்தையன்
சிறுதே ருருட்டியருளே. (உ)

31. சொல்லரிய பொன்னுருளை சேர்த்துவயி ரத்தினாற்
சோதிபெறு மச்சிணக்கித்
துய்யகோ மேதகப் பலகையிடை சேர்த்தியே
துலங்குபோ திகைதிருத்தி
நல்லபுது வைடூரி யத்தினால் வேய்ந்தொளிரு
நவமணி குயிற்றியருண
நல்குபவ ழக்கால்க ணட்டிநீ லச்சட்ட
நாற்பாங்கு மேநிறைத்து
மல்லுலவு தலையலங் காரமுஞ் செய்துநிறை
வரிசையி லலங்கரித்து
மாமேரு கிரிபோல் விளங்கமே லானநின்
மாமனு ரான கருணைச்
செல்வரா மெழில்விசய கோபாலர் வரவிட்ட
சிறுதே ருருட்டியருளே
தென்பழனி நகரிவரு சிவகிரியின் முத்தையன்
சிறுதே ருருட்டியருளே. (ங)

பழனிப்பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

தென்றல்வரை—பொதியின்மலை.

31. போதிகை—தேருறுப்புக்களி லொன்று. குயிற்றி—பதித்து. அருணம்—செந்நிறம். நீலச்சட்டம்—நீலமணியாற்செய்த சட்டங்கள். தலையலங்காரம்—தேரின் மேற்பாகம்; "பொற்றே ரிருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே" (அம்பிகாபதிபாடல்.) விசயகோபாலர்—பழனியைச்சார்ந்த பாலசமுத்திரமென்னும் ஊரிலிருந்த ஒரு ஜமீன்தாரென்றும் விசயகிரிதுரையென இவர்பெயர் வழங்கப்படுமென்றும் சொல்லுவர். திருமாலாக உருவகித்து இவரை மாமனென்றார்.

637 *கோழரைய காஞ்சிரைதாம் [1]பழுத்தயலே
நிற்பவற்றிற் குறுகா தாங்குக்
காழிலவாங் கொழுங்கதலிக் [2]கனியினைச்சேட்
சென்றருந்துங் கவிகண் மார்க்க
மூழிலவாய்ப் படைத்தபொருள் பிறர்க்குதவா
[3]வுலோபரைநீத் துசித மான
வாழ்வுடையோர் [4]வாழ்மனைச்சென் றமுதருந்திப்
பசிதணிவார் மார்க்க மானும். (உஉ)

638 *வாசமொரு சிறிதின்றா யிணரூழ்த்த
செம்மலர்தம் மருங்காய் நிற்பப்
பூசல்வரி வண்டினங்க ணீளிடைப்போய்
வாலிதாம் பூந்தேன் மாந்த
லாசறக்கற் றுணர்த்தறியா ரவைக்களநீத்
தேசெலச்சொல் பவாரய் நுண்ணூல்
காசறக்கற் றவர்கழகத் தடைந்துநல
[5]னுகர்பவர்தங் காட்சி மானும். (உ௩)

வேறு.

639 *கருநிறப் பருஉக்காழ்க் களங்கனி வதுளாக்
காமர்தீங் கனிகண்மாங் கனிகள்
பெருமிதப் பலவின் [6]கனிகடுற் றியபின்
பீடுலாங் காழிலாக் கனியை
யொருமுகப் படவுண் சுகமுறு சுகமாங்
குபயநூல் கலைமுறை முறையே
குருமுகத் துணர்ந்த பின்னர்நான் மறைதேர்
குறிப்பினர் சுகம்பொரு வருமே. (உ௪)

640 ஒருங்களி யிழைத்த விறலுடைக் குருதே
ணவுசா லோதிம மோதிப்
பெருங்குவ டுழக்க மதியுரு மயிர்தப்
பெருக்கய லெழுவகண் டெழுதுங்

[பி-ம்.] [1]பழுத்தருகே. [2]கனிகளைச். [3]வுலுத்தரைநீத். [4]பொன்மனைச், [5]னுணர்பவர்தங். [6]கனிசுவைத் ததன்பின், மா,

கருங்கொடி தளைப்ப வெழாததன் றிவலை
காமர்வாய்க் கோடல்சிற் றின்பத்
திருந்தவர் சிறிதும் பிணிப்பறு துயர்பே
ரின்பமுந் துய்ப்பதே பொருவும். (உ௫)

வேறு.

641 காலையிற்சா ரலினுரவோர் யாகவனீ
கத்தமிர்தங் காட்டுந் தூபம்
வேலையிற்செங் கதிர்சயிலத் திடைப்பகல்வை
கலினடைந்த விரைசேர் தூபஞ்
சோலையின்மா லையிற்பிறைபூ கப்பழுக்காய்
சேர்தாச்சேர் தூப மூத்தி
மாலையுநன் பகலொடுகா லையுந்தான
மாறினபோல் வயங்கு மன்னோ. (உ௬)

642 நூற்றினைப்பத் தடுக்கியிரு நான்கினைமேற்
கொண்டதென நவலும் பான்மை
மாற்றுறுமா டகப்பசும்பொன் றனையள்ளிக்
கேவணங்கள் வகுத்து நாப்பண்
ணேற்றமுறு மருமணிகள் குயிற்றுபுபே
ரணிதிருமாற் கியற்றும் பான்மைக்
காற்றலமைந் துளதென்று லெம்மலைக்கண்
ணிருப்பாருச் சனைசெய் வாரே. (உ௭)

643 கைம்மலைக்கண் றுதவுமிருள் கான்மலையைக்
களபமுலைக் கமலை தோயுஞ்
செம்மலைத்தாம் வழிபடுதற் கமைந்தவற்றைக்
கரங்களினச் சிலம்பி னோடு
பிம்மலைக்கண் ணிருந்தியற்று கெனத்தருவுஞ்
சாமியுஞ்சே டரினின் நீயு
மம்மலைக்க ணல்லான்மற் றெம்மலைக்கண்
ணிருப்பாருச் சனைசெய் வாரே. (உ௮)

644 மேலைவா னவர்க்குதவுங் கற்பகக்கா
மிடைந்தனவாய் விரவி யீன்ற
காலைநாண் மலரிணையந் தணர்திருமாற்
கணிந்துகளைந் திடலும் பாங்கர்ச்
சோலைநாண் மலரினொடுந் துவன்றினவாய்த்
தெழித்துநதி சுழித்தே யோங்கி
மாலையா றெனவொழுகுங் கங்குலுநன்
பகலினுமம் மலைக்கண் ணுளும். (௨௯)

645 தாழ்வரைத்தெள் ளறல்கொழித்த படிகர்முழு
மணிக்குவையுட் டழுவு சாரற்
சூழ்பொழிற்புன் கலர்துணர்விண் டிழிநறைதா
ழுறச்சுரும்பிற் சுடருந் தோற்றம்
வாழ்மறையோர் பொறிமுகந்திட் டாச்சியமு
மரிசனமும் வழங்குங் குண்டக்
காழ்வயிரக் கனல்கதுவிக் கொழும்புகையிற்
சுடர்கெழுநற் காட்சி மானும். (௩0)

646 கம்பவா ருதிப்படுக ரிறுவரைவா
யிளங்கதிருட் காணு தோட்டி
வம்புலா மலர்ப்பொதும்ப ரள்ளிலைகள்
னிடையினிருள் வைப்ப நாளும்
வெம்புவான் கடுந்திறனைப் விடநாக
முமிழ்ந்தவிழு மணிகள் யாவுஞ்
செம்பொனு லயமெனவே பகல்பரப்பி
யிருட்பிழம்பைச் சீப்ப தாமே. (௩௧)

647 சந்தனத்தண் பொழிலிடையே சண்பகப்பைம்
பொழில்விரவு சயில மார்பில்
வெந்தழற்கட் செவித்துளைப்பற் பணியுமிழ்ந்த
மணிபகற்செய் விளக்க மல்லா

லந்தியிலக் தனர்[1]வழிபட் டருத்தியவா
குதிபருகு மான்ற சோதிச்
செந்தழனள் ளிருடோந்து திருத்தகுபுத்
தேனுலகிற் சிறப்ப தாமே. (௬௨)

வேறு.

648 பலாவு மாவுங்கொன் னுகமும் பாலோய்ப்
பலாவு மாவுங்கொன் னுகமும் பைத்தெழீஇக்
கலாவ மாமயி லஞ்சுகங் காலொளி
கலாவ மாமயி லஞ்சுகங் காட்டுமே. (௬௩)

649 கான கத்தின் கிளைத்துக் கனமணி
கான கத்தின் கிளைத்துக் கனமழை
தான கைத்தலத் தாரிற் றவளமாத்
தான கைத்தலத் தாரிற்பெய் தார்க்குமே. (௬௪)

650 என்று மேக மிசைமதிப் பாகமோ
டென்று மேக மிசைமதிப் பாகவே
யொன்று மாக முழுதலைச் செய்யுமூ
தொன்று மாக முழுதலைச் செய்யுமே. (௬௫)

651 * இலங்கொண் மூவெயில் குன்றவில் லேற்றுவா
னலங்கல் வாரி யமைந்திறப் பெய்தவே
ரலங்கல் வாரி யமைந்திறப் பெய்தவே
கிலங்கொண் மூவெயில் குன்றவில் லேற்றுவான். (௬௬)

652 பிடியி டைச்செல்வ மாதர்க ளிற்றினம்
பிடியி டைச்செல்வ மாதர்க ளிற்றினம்
கடிய வான மடங்கலின் கண்ணுறும்
கடிய வான மடங்கலின் கண்ணுறும். (௬௭)

வேறு.

653 நான்றபுழைத் தடக்கைவயக் களிற்றிரைதே
ரடலரிகள் ளிருளிற் றன்கட்
டோன்றுகரித் திரளினைப்பின் றொடர்தலும்பின்
றொடர்பிடிக டுணுக்குற் றந்தோ

[பி-ம்.] [1]வழிப்பட். ௪.

வீன்றகயந் தலைப்பிடிகண் டயலிரிய
விரிந்தகரித் திரள்கள் பாந்த
ளான்றபகு வாய்முழைபுக் கவிந்தனவால்
விதியினையா ரழிக்கற் பாலார். (௩௮)

654 *உற்றவயக் களிற்றினொடு பிடியினையாங்
கொருபாந்த ளொருவாய்க் கொள்ளக்
கற்றதுகண் டிருதலைப்புள் ளவற்றிருகை
கவர்ந்தெடுப்பக் கவ்வு காலைப்
பற்குலமுக் [1]கிடருழந்த விழவூழ்வர்
தடியிடுகோட் பசைய தாகப்
பெற்றபொரு ளினைப்[2]போற்றி முதலுமிழ்ந்
[3]திடருழப்போர் பெற்றி மானும். (௩௯)

655 உடுவாழுஞ் செக்கரில்வந் துருவுபிறை
யினைச்சிகரத் துலவுங் கொண்மூத்
தொடுவாழ்வி னெடும்பிளிறிக் குறுந்திவலை
பணிற்றுமதைத் தோட்டி யூன்றி
வடுவாழ்செம் புகர்நெற்றித் தனிமருப்பிற்
குளிறுமதக் களிறென் றேங்க
னடுவாழுங் கரியறைகூய்ப் பணைக்கையினை
யும்பர்மிசை நடத்து மோர்பால். (௪௦)

656 புட்டொழுதி யொடுமிரிய நரல்வேணு
வெதிர்பொருது பொழிந்த செந்தீ
னெட்டொழுகு படவளைப்ப நடுவணதாங்
கயந்தலையி னிலைமை நோக்கி
மட்டொழுகு மருவியினைப் புழைக்கையா
லுழுஞ்சிமத வேழம் வெந்தீப்
பட்டொழுக வெறிந்ததைமீட் டிரும்பிடியோ
டதன்முழைபோய்ப் பயிலு மோர்பால். (௪௧)

[பி-ம்.] [1]கிடருழந்த தீவினைவர். மா. [2]பேணி. மா. [3]கிடருறுவோர். மா.

657 அடியிழுக்குற் றடிவரைவீழ் புனிற்றிளங்கன்
றுறுகொடியார்த் தயனின் றூடப்
பிடியிழுக்குற் றெடுப்பலெனத் தூனைவதுகண்
டதனினருள் பெருகி யாங்கக்
கொடிபிடித்துற் றெடுத்துயக்கொள் களிற்றுநிலை
கொடுரைகிற் குறுகு வோரைக்
கடிமலர்க்கட் டிருமகளிற் கருணைபுரிந்
தெடுத்துயக்கொள் கடவுண் மாறும். (சஉ)

658 *திரகாயத் திரிகருணைக் கிலக்காகு
முணர்வுடையோர் சித்தி காட்டப்
பாகாயத் திடைபுகுந்து மறித்தொருகா
யம்[1]புகுதும் பான்மை யேய்ப்ப
வுரகாயத் துரிவையுரீஇ யொருபாந்த
ளொருபாந்த ளுரிபுக் கூர்ந்து
வரகாயத் தகடுரிஞ்சும் பஃறலைய
மலைமுழைபோய் வைகு மன்னே. (சங)

659 நீண்டனவா யாழ்ந்தசுனை நீரிடைப்போ
யிருதலையு நிலாய தாகக்
காண்டகுமா சுணக்கிடப்ப பாலமென
கடந்தகரிக் கறைத்தாள் வாய்க்கொண்
டூண்டனதா மெனக்குறிப்பக் கருமுகின்மின்
னுயிர்த்திடவே யொளிர்கே மிக்கு
மாண்டதுபோன் மாண்டதுமா சுணமுயிர்வாழ்ந்
ததுகததூ மதமா மன்னே. (சச)

660 பெரும்புலிக ளீன்றனுமைப் போதினவாங்
குருளைமடப் பிடிக ளீன்ற
வரும்பவழக் குழக்களிற்றி னிரையிடைப்பாய்த்
திரைகவரு மந்தண் சாரற்

[பி-ம்.] [1]புகுமப், மா.

சுரும்பிமிர்கா ழகிற்பொதும்பர்ப் பசும்பொனசும்
பினிலரணை தோய்ந்து தோன்றப்
பொரும்பகைசால் கோம்பியெனச் சாம்பிமயி
லினமிரிந்து போவ தாமே. (௪௫)

661 பொருந்துபருப் பதக்குடுமி நிவந்[1]துழக்கி
முழுமதியின் பூட்சி போழ
மருந்துடைத்துத் தாரையதா யிழிதரவே
வாளரவில் வாலி தாமென்
றருந்துதற்கு வெண்டலைவள் ளுகிர்க்கணைத்தாட்
ககனவெளி யடைக்கும் பந்தர்ப்
பருந்தமிர்தென் றுற்றுணர்த்துஞ் சகோரமுடன்
விருந்தருந்தும் பான்மைத் தாமே. (௪௬)

662 உச்சிவான் மலைச்சிகரத் துறுகொடிகள்
படர்பாங்க ருடைய வாகும்
பச்சைவெய்ங் கழைத்தலையிற் சுழல்வனவாய்த்
தோகைநடம் பயிலு நீர்மை
மொய்ச்சுலாங் குழற்கழைக்கா ரிகைபாசம்
பூண்டகழை முடிமே னின்றே
விச்சைமே தகப்பவுரி காட்டுவதா
மெனக்கவினு மேன்மைத் தாமே, (௪௭)

663 காவின்மேற் படுபலவின் கனிகடுவன்
கொடுசினைதாழ் காமர் வல்லி
மாவின்மேற் படர்ந்ததன்மேன் மந்திகடம்
வயிற்றிடையே மகவைத் தாங்கித்
தாவினூற் றவறுடைத்தா மெனவருவ
தொடும்போகுந் தன்மை கூத்த
ரோவில்வான் கழைக்கயிற்றின் முழவுதழீஇ
யெதிர்நடப்ப தொப்ப தாமே. (௪௮)

[பி-ம்.] [1]தழக்கு சா.

வேறு.

664 தேவர்கிம் புருட ரியக்கர்கந் திருவர்
தெய்வமா ணிடரெனுந் திரளார்
யாவரு மலர்பெய் தவிசமைத் திணங்கி
யிணைவிழைச் செய்துகா லையினிற்
றுவருஞ்சுடர்ப்பொற் பூணுறீஇ யுதிர்ந்த
தமனியப் பொடிகளும் பசுந்தேன்
வீவருஞ் சுடர்ப்பூஞ் சுண்ணமூந் துவன்றி
வெள்ளிடை யிலாமருங் கினவே. (௪௯)

665 மேதக வுடைக்காந் திருவர்நன் கலவி
வேலையா டுதற்குமுன் கழித்த
பீதக வாடை கவர்கவிக் குலங்கள்
பெயர்ந்தரை யுடீஇயதுற் றனரா
யாதக வழிந்த தெனவயர்ந் தொருகை
யாளிகோக் கமைதரா நீட்டப்
போதகங் குழைந்து கற்பகம் புரந்த
பொலந்துகி லறையுடீஇப் பொலிவார். (௫௦)

666 காலமு மிடனு மெய்துகா லையிலே
காந்தமாங் கெய்தலுங் கவராச்
சீலமும் விழியு மொன்றிய திறத்தாற்
றிரண்முலைச் சுவட்டொடு புயமு
மாலமர் கடவுள் பரையுடன் கலந்த
தாமெனக் கலத்தலும் பொறித்த
கோலம தழித்த வெயர்வடங் குதற்குக்
கொடுத்தபூஞ் சுண்ணமு மணிவார். (௫௧)

667 புடைபரந் திறுகிப் புளகமுற் றெழுந்த
புணர்முலைச் சுவடுமார் பகமு
மிடையொலி நுழைதற் கிடையற நெருங்கு
மெல்லிலையி னறுத்துவெண் டாளத்

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1931-ம் வருஷம் டிசம்பர்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1931 டிசம்பர்	வரவு 1930 டிசம்பர்	விவரம்.	செலவு 1931 டிசம்பர்	செலவு 1930 டிசம்பர்
I General Section:			I General Section:		
(1) மாதச்சந்தா வகையில் வரவு ...	50		(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	104 10 8	
(2) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக்கட்டணத்தொகை வரவு	5		(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	127	
(3) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	28		(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது ...	124 13 4	
			(4) Stationery contingencies வகையிற்செலவு ...	... 10 ...	
மொத்தம் ரு ...	83	167			

II EDITORIAL SECTION:						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வகையில் வரவு ...	14	...	...			
(2) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ...	12	...	...			
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	119	3	...			
மொத்தம் ரூ ...	145	3	...	91	11	...

(5) தபால், தந்திவகையிற் செலவு	4	8	...			
(6) முனிசிபாலிடிக்கு வரி செலுத்திய வகையிற் செலவு ...	100	1	7			
(7) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	20	...	...			
(8) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு. ...	4	1	6			
மொத்தம் ரூ ...	485	13	1	389	1	1
II EDITORIAL SECTION:						
(1) ஷெ ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ...	...	2	...			

III Press Section:						
(1) அச்சுக்கூலி வகையில் வரவு ...	139	8	...			
(2) ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரையம் வரவு ...	...	14	...			
(3) பைண்டிங்கூலி வகையில் வரவு ...	23	14	...			
மொத்தம் ரூ ...	164	4	...	187	13	...

(3) ஷை புத்தகங்கள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு. ...	70	...	...			
(4) தபால், தந்திவகையிற் செலவானது. ...	10	...	...			
மொத்தம் ரூ ...	115	2	...	168	7	6
III Press Section:						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	100	12	3			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	11	13	9			
(3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது	28	6	11			
(4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு	15	3	...			
(5) மெஷின்வகையரா ரிப்பேர் வகையிற் செலவு. ...	8	8	...			
மொத்தம் ரூ ...	164	11	11	187	15	8

ஆகமொத்தம் வரவு ரூ ...	392	7	...	446	8	...
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ...	15814	10	1	8977	...	10
ஆகமொத்தம் ரூ ...	16207	1	1	9423	8	10

ஆக மொத்தம் செலவு ரூ ...	765	11	...	745	8	3
மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	*15441	6	1	8678	...	7
ஆகமொத்தம் ரூ ...	16207	1	1	9423	8	10

*By M. U. C. C. S. Pass Book Rs. 5000- 0- 0

M. R. C. C. Bank Pass Book Rs. 10106-15- 8

Cash on hand Rs. 334- 6- 5

15441- 6- 1

Audited and found correct,

V. S. RAMASWAMI,

AUDITOR,

10—8—32.

LAKSHMINARAYANAN,

Manager,

MADURA TAMIL SANGAM.

5—1—1932.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1932-ம் வருஷ ஜனவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1932 ஜனவரி			வரவு 1931 ஜனவரி		
I General Section :						
(1) நன்கொடைவகையில் வரவு.	1000	...	...			
(2) மாதச்சந்தாவகையில் வரவு...	50	...	...			
(3) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	137	6	11			
(4) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக்கட்டணத்தொகை வரவு	143	11	...			
(5) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகைவரவு ...	28	...	...			
(6) Miscellaneous வரவு ...	...	14	...			
மொத்தம் ரூ ...	1359	15	11	280	...	6

விவரம்	செலவு 1932 ஜனவரி			செலவு 1931 ஜனவரி		
I General Section :						
(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	120	...	...			
(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	127	...	...			
(3) Stationery, contingencies வகையிற் செலவு ...	4	6	...			
(4) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைகளுக்குச் சந்தா செல்லாக்கியது ...	18	10	...			
(5) தபால், தந்திவகையிற்செலவு	2	...	...			

II EDITORIAL SECTION :						
(1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச்சந்தாவகையில்வரவு ...	8	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	84	6	6			
(3) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	4	8	...			
மொத்தம் ரூ ...	96	14	6	160	11	...

(6) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு.	1	12	...			
(7) Miscellaneous செலவு...	2	14	...			
மொத்தம் ரூ	276	10	...	299	...	3
II EDITORIAL SECTION:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ...	5	6	...			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	59	...	...			
(4) தபால் தந்திவகையிற் செலவு	12	8	...			
மொத்தம் ரூ ...	111	14	...	39	3	9

III Press Section:						
(1) அச்சுக்கூலிவகையில் வரவு.	96	8	...			
(2) ஷை அச்சு வேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரயம் வரவு ...	2	8	...			
(3) பைண்டிங் கூலிவகையில் வரவு ...	22	1	...			
மொத்தம் ரூ. ...	121	1	...	166	4	...

III Press Section:						
(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	110	9	2			
(2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	9	14	6			
(3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ..	30	3	7			
(4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	...	7	3			
மொத்தம் ரூ. ...	151	2	6	173	12	4

ஆகமொத்தம் வரவு ரூ. ...	1577	15	5	606	15	6	ஆக மொத்தம் செலவு ரூ.	539	10	6	512	...	4
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ...	15441	6	1	8678	...	7	மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ரூ. ...	*16479	11	...	8772	15	9
ஆகமொத்தம் ரூ. ...	17019	5	6	9285	...	1	ஆக மொத்தம் ரூ. ...	17019	5	6	9285	...	1

*By M. U. C. C. S.
Pass Bk. Rs. 5000– 0– 0
M.R.C.C. Bank
Pass Bk. Rs. 11294– 6– 7
Cash on hand Rs. 185– 4– 5
16479–11–...

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
10—8—1932.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
5—2—1932.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம் .	6	0	0
	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	5	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	3	0
2.	களநால் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
*7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)			
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
*9.	அநுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	2	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
23.*	விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.*	சந்திராலோகம்			
29.	சோழவம்சசரித்திரச்சுருக்கம்	1	0	0

30. ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31. பாண்டியம்	0	4	0
32. மநீஷாபஞ்சகம்	0	8	0
33. வேளிர்வரலாறு	0	8	0
34. அகப்பொருள்விளக்கம்	1	4	0
35.* திருமந்திர நூறுபாட்டுக்குரை ...			
36. உவமானசங்கிரகம்	0	1	0
37. மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38. திருப்புல்லாணிமாலை	0	2	0
39. பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)	1	0	0
40. திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41. பொருட்டொகைநிகண்டு	0	6	0
42. அகராதிநிகண்டு	0	12	0
43. மேகவிடுதூது	0	2	0
44. திருக்குற்றாலமாலை	0	2	0
45. தண்டலையார்சதகம்	0	4	0
46. இராமோதந்தம்	0	3	0
47. பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48. சேதுநாடுந் தமிழும்	0	6	0
49. கடைவள்ளலார்காலம்	0	6	0
50. தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51. மதங்கசூளாமணி	1	0	0
52. கூடற்புராணம்	0	10	0
53. திருவள்ளுவர்	0	6	0
ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54. அரும்பொருள்விளக்க நிகண்டு	1	4	0
55. மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56. பாப்பாவினம்	0	10	0
57. மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58. பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:—1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4—8—0. இதுவரை 29 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன, இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.